செ.வெ.எண். 21 நாள் - 07.09.2020

நீலகிரி மாவட்டம், குன்னூர், புனித மரியன்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் பள்ளிக்கல்வித்துறை சார்பில், பள்ளிகளில் சிறப்பான முறையில் பணியாற்றிய 9 ஆசிரிய, ஆசிரியைகளுக்கு டாக்டர் இராதாகிருஷ்ணன் விருதினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா இ.ஆ.ப., அவர்கள் வழங்கி பாராட்டினார்.

---

நீலகிரி மாவட்டம், குன்னூர், புனித மரியன்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் பள்ளிக்கல்வித்துறை சார்பில், பள்ளிகளில் சிறப்பான முறையில் பணியாற்றிய 9 ஆசிரிய, ஆசிரியைகளுக்கு டாக்டர் இராதாகிருஷ்ணன் விருததினை வழங்கும் நிகழ்ச்சி இன்று (07.09.2020) மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கலந்து கொண்டு, டாக்டர் இராதாகிருஷணன் விருதினை வழங்கி பாராட்டினார். இந்நிகழ்ச்சியில் குன்னூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.சாந்தி ஏ.ராமு அவர்கள் முன்னிலை வகித்தார்.

நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா இ.ஆ.ப., அவர்கள் பேசியதாவது:-

“மாணாக்கர்களின் அறிவுக் கண்ணை திறக்கும் ஆசிரியராகத் தன்னுடைய வாழ்வைத் தொடங்கி, நமது நாட்டின் குடியரசுத் தலைவராக உயர்ந்து, ஆசிரியர் சமுதாயத்திற்கு பெரும் சிறப்பினை சேர்த்த தத்துவ மேதை டாக்டர் எஸ்.இராதாகிருஷ்ணன் அவர்களின் பிறந்த தினமாக செப்டம்பர் திங்கள் 5ம் நாள் ஒவ்வொரு ஆண்டும் ஆசிரியர் தினமாக கொண்டாடப்படுகிறது. இந்நாளில், சிறந்த கல்வித் தொண்டாற்றும் நல்லாசிரியர்களுக்கு “டாக்டர் இராதாகிருஷ்ணன் விருது” வழங்கி தமிழ்நாட அரசு கௌரவித்து வருகிறது.

அதனடிப்படையில் 2019-2020ம் ஆண்டிற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று (07.09.2020) தலைமைச் செயலகத்தில் பள்ளிக்கல்வித்துறை சார்பில் ஆசிரியர் தின விழாவையொட்டி பள்ளிகளில் சிறப்பான முறையில் பணியாற்றி தமிழ்நாடு அரசின் நல்லாசிரியர் விருதுக்கு தேர்வு செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கு டாக்டர் இராதாகிருஷ்ணன் விருதுகள், வெள்ளிப் பதக்கங்கள் மற்றும் ரூ.10,000/- தொகைக்கான காசோலைகளை வழங்கினார்கள். மேலும் கொரோனா நோய்த்தொற்று காலம் என்பதனை கருத்திற்கொண்டு, அந்ததந்த மாவட்ட ஆட்சித்தலைவர் மூலம் நல்லாசிரியர் விருதினை வழங்கிட அறிவுறுத்தியுள்ளார். அதனடிப்படையில் இன்று நீலகிரி மாவட்டத்தில் நல்லாசிரியர் விருதுக்கு தெரிவு செய்யப்பட்ட 9 ஆசிரிய, ஆசிரியைகளுக்கு நல்லாசிரியர் விருதுகள் வழங்கப்பட்டுள்ளது. விருதுகள் பெற்ற அனைவருக்கும் எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.” என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் முதன்மை கல்வி அலுவலர் (பொ) கொ.பாண்டிய ராஜசேகரன் அவர்கள், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர் முனைவர்.அ.ரமேஷ் அவர்கள், உட்பட அரசுத்துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நீலகிரி மாவட்டம்